

# அரசரும் இராஜாளியும்

முன்னொரு காலத்தில் வேட்டையாடு-வதில் மிகுந்த விருப்பமுடைய ஓர் அரசர் வாழ்ந்து வந்தார். அவர் இராஜாளியைச் செல்லப் பறவையாக வளர்த்து வந்தார். காட்டில் வேட்டையாடச் செல்லும் பொழுது அவருக்கு அது பெரிதும் உதவி செய்யும்.

ஒரு நாள் காலையில் அரசர் தம் செல்லப் பறவையோடு சில காவலாளிகள் துணையுடன் வேட்டைக்குக் கிளம்பினார். காட்டில் அவர் புள்ளிகளுடைய ஒரு மானைப் பிடிக்க முயன்றார். ஆனால், அது வேகமாக ஓடி, காட்டிற்குள் வெகு தொலைவு சென்று விட்டது. வெகு தொலைவிற்கு அதைத் துரத்தி வந்ததால் அரசரைத் தொடர்ந்து வந்த காவலாளிகள் அனைவரும் பின்தங்கி விட்டனர். இராஜாளியும், அரசருடைய குதிரை மட்டுமே அவருக்குத் துணையாக இருந்தன.

முடிவில் அரசர் தேடுதலை நிறுத்திக் கொண்டார். அவருக்கு இப்பொழுது கடுமை-யான தாகம் ஏற்பட்டது. அவர் தம் குதிரையை தொடர்ந்து செலுத்தினார். ஒரு சிறிய குளத்தை அடைந்தார். அவர் ஒரு கோப்பையை எடுத்து அதை நீரால் நிரப்பினார். அதை அவர் தம் உதட்டருகே கொண்டு செல்லும் பொழுது இராஜாளி பறந்து வந்து தன் சிறகால் அக்கோப்-பையைத் தட்டி விட்டது. அரசர் மறுபடியும் கோப்பையை நீரால் நிரப்ப இராஜாளி அவ்விதமே செய்தது.

அரசருக்கு இதனால் மிகுந்த கோபம் மூண்டது. கத்தியை எடுத்து இராஜாளியைக் கொல்ல முயன்றார். அப்பொழுது இராஜாளி தன் தலையை உயர்த்தி அம்மரத்தைப் பார்த்தது. அந்த மரத்தில் கொடிய நஞ்சு உள்ள பாம்புகள் அநேகம் இருந்தன. அவற்றினுடைய நஞ்சு சொட்டுச் சொட்டாகக் குளத்தில் விழுவதை

அரசர் பார்த்தார். பின்னர் இராஜாளியை நன்றியுடன் பார்த்தார். தம்முடைய உயிரை அப்பறவை காத்ததை எண்ணி வியந்தார்.

**"ஆறறிவில்லாத பிராணியும்**
**அன்புக்குக் கட்டுப்படும்"**